# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,273 — 1937 ம் ௵ மாசி௴ 19 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரையைப் பற்றிய சட்டம்.

1937 ம் ஆண்டு சந்தானு நாயகியின், பங்குனி திருவிழாவுக்கு வழக்க மான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதி யவர்கள் 1931 ம் ஆண்டின்இலங்கைச் (இராச்சிய மந்திரசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தினுற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

டீ. பீ. ஜயதிலக,
சுபகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்நோர்,
கொழும்பு, 1937 ம் ௵ மாசி௴ 12 ந் உ.

மேற்குறித்த ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் ளடங்கிய விசாலத்தைக் கருதும்."

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்கு களின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினுல் ,அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலஞ்சலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய, வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும், தண்ணீர்ப்பதார்த்தமான அல்லது கட்டிப் பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (a) அடிக்கப்படும்படி அங்கே கொண்டுவரப்பட்டவைகளும் உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளைப்படி அவ்விடப்பரப்புக்குள் வைத்துக்கொள்ள இடங் கொடுக்கப்பட்டவைகளுமான ஆடு மாடுகளைத் தவிர வேறு ஆடு மாடுகளை வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவரும் வைத்திருக்கப்பட்டாது.

(b) உதவி அரசாட்சி ஏசன்றரால் ஒரு மாட்டுக்காலையாக விசேஷமாய் நியமிக்கப்பட்ட அல்லது அப்படிப் பாவிக்கலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்ட ஓர் இடத்திற் தவிர மற்றப்படிக்கு வாடியின் இடப்பரப்பின் சமீபத்தில் ஆடு மாடுகளை வைத்திருக்கப்படாது.

(c) அவ்வாடுமாடுகளைத் தன் பொறுப்பில் வைத்திருப்பவன் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிசமீபத்திலுள்ள இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடு மாடுகள் நிற்குமிடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான் விழாமலும் தூசி படியாமலும் இருக்கும்படி (a) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும் அல்லது (b) கண்ணுடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (c) வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது வாடி வீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப்பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும், தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளை நோய் உண்டாக்கக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல யாத்திரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப் போகும்படி செய்தும், அவர்கள் அங்கிருந்து எப்பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (a) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்து வியாதியுள்ள ஒவ்வொருவனும் அல்லது (b) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்குத்தருக்கு அல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தை யல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாக வைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தை யல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசன்டரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பாண் போறணை, சோடாமேழான், கோப்பி தேநீர் கடைகள், சாப்பாட்டுக் கடைகள், அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ் லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக்களின் எல்லைக்குட் செல்லக்கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச்சீட்டு அல்லது லைசென்ஸ் பெருமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும் படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்குமிடங்களில் ஆடு மாடு அடிப்போர் அவ்விடத்தைக் துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

தலைவில்லுவாடி இடப்பரப்பின் எல்லைகள்.

வடக்கு : தலைவில்லு ஓடை ;

தெற்கு : ஏத்தாலை தலைவில்லும், தேலிக்குடா தலைவில்லும் அடிப்பாதைகள் எறும்புக்குடலில் வந்துசேருஞ் சந்தியிலிருந்து நேர்மேற்குப் புறம்பாகக் கடலுக்குப்போகும் அடிப்பாதை ;

கிழக்கு : பண்டாரம் கருக்குவச்சான் பெரியதோட்டம் வழிகள் ;

மேற்கு : கடல்.

ஏத்தாளைவாடி இடப்பரப்பின் எல்லைகள்.

வடக்கு; தேறிக்குடாவிலிருந்து நேர்மேற்குப் புறமாய் மணல்அணைக்குப் போகும் அடிப்பாதை;

கிழக்கு : சிறுகடல் ;

தெற்கு : சருவிஅளை ;

மேற்கு ; மணல் அணை.

---

நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய
1901 ம் ஆண்டுச் சட்டம்.

மொறட்டுவப் பட்டண மண்டல சபையாரால் உண்டாக்கப்பட்ட, நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய 1901 ம் ஆண்டுச் சட்டத்தின் 5 ம் பிரிவின்படியும் 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சனுதிகார ஆட்சிச்சட்டத்தின் 245 ம் பிரிவின்படியுமான, உபவிதிகள்.

சீ. எஸ். ஏ. பெரரா,
மொறட்டுவப் பட்டண மண்டலசபை அக்கிராசனர்.

மொறட்டு,
1937 ம் ஞூ மாசிமீ 10 ந் வ.

உபவிதிகள்.

1. மொறட்டுவப் பட்டண மண்டலசபையின் எல்லைகளுக்குள் வைத்திருக்கப்படும் 6 மாசத்துக்கு மேற்பட்ட வயசுள்ள ஒவ்வொரு ஆண் நாயினதும் அல்லது பெண் நாயினதும் விஷயத்தில், அதற்குப் பொறுப்பாயிருப்பவர் அல்லது அதை வைத்திருப்பவர் அவ்வாண் நாய் ஒவ்வொன்றுக்கும் 1 ரூபாவும் அப்பெண் நாய் ஒவ்வொன்றுக்கும் 1 ரூபா 50 சதமும் வருஷாந்தப் பதிவுவேதனம் கட்டுதல்வேண்டும். இந்த உபவிதியின் நோக்கங்களுக்காக ஒரு வருஷம் என்பது ஒவ்வொரு வருஷத்திலும் ஏப்றில் மாசம் 1 ந் தேதி தொடக்கம் அடுத்த வருஷம் மார்ச் (பங்குனி) மாசம் 31 ந் தேதி வரையிலுமெனக் கணக்கிடப்படும்.

2. மேற்சொல்லிய எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு வீட்டுக்குடியிருப்பவரும், ஒவ்வொரு வருஷத்திலும் ஜனுவரி (தை) மாசம் 31 ந் தேதியிலன்று அல்லது அதற்குமுன் அவ்வீட்டில் அல்லது அதற்குரிய வளவுக்குள் வைத்திருக்கப்படும் 6 மாசத்துக்கு மேற்பட்ட வயசுள்ள ஒவ்வொரு ஆண் நாயினதும் அல்லது பெண் நாயினதும் விஷயத்தில் இதனோடிணைத்திருக்கும் அட்டவணையிலுள்ள A அட்சர மாதிரிக்கடுதாசிப்படியான ஒரு விவரப்பத்திரத்தை (இதனகத்துப்பின்னர் அறவிடுபவர் எனப்படும்) பதிவு வேதனம் அறவிடுவதற்காக மேற்சொல்லிய பட்டண மண்டல சபையின் அக்கிராசனரால் நியமிக்கப்பட்ட வரிடம் கொடுத்தல் வேண்டும்.

3. 1 ம் உபவிதியின்படி அதின் விஷயத்தில் ஒரு வருஷாந்தப் பதிவு வேதனம் கொடுபடவேண்டிய எவ்வாண் நாயாவது பெண் நாயாவது வைத்திருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர் மேற்சொலலிய பட்டண மண்டல சபைக் காரியதரிசியிடம் அல்லது அறவிடுபவரிடம் மேற்சொல்லிய வேதனம் கொடுத்தபோது காரியதரிசியிடமிருந்து (*a*) தாற்பரியத்தளவில் இதனோடிணைத்திருக்கும் B அட்சர மாதிரிக்கடுதாசிப்படியான ஒரு பதிவுச் சான்றுரைப்பத்திரமும் (*b*) ஒரு ரப்பிளெற் கழுத்துப்பட்டிகையும் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளவர் ஆவர். அப்பதிவுச் சான்றுரைப்பத்திரம் பெலமுற்றுவழங்கிவரும் காலமெல்லாம் எல்லாவேளைகளிலும் அவ்வாண் நாயின் அல்லது பெண் நாயின் கழுத்தைச்சுற்றி அந்த ரப்பிளெற் கழுத்துப்பட்டிகையைக் கட்டிவிடுவது அல்லது கட்டுவித்துவிடுவது அவ்வாண் நாயாவது பெண் நாயாவது வைத்திருப்பவரின் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவரின் கடமையாகும்.

4. அப்படிக் கொடுக்கப்பட்ட பதிவுச் சான்றுரைப்பத்திரம் எந்த ஆண் நாய்க்கென்று அல்லது பெண் நாய்க்கென்று கொடுக்கப்பட்டதோ அந்த ஆண் நாய் அல்லது பெண் நாய்—

(*a*) ஒரு ரப்பிளெற் கழுத்துப்பட்டிகையில்லாமல் அலைந்து திரிகிறதாகக் காணப்படுமாகில் ; அல்லது

(*b*) அது எவ்வளவாக அங்கவீனப்பட்டிருப்பதால் அல்லது நோய் பிடித்திருப்பதால் அக்கிராசனரின் அபிப்பிராயப்படி உயிரோடிருப்பதற்கு ஏற்ற நிலையில்லையானுல் ; அல்லது

(*c*) அக்கிராசனரின் அபிப்பிராயப்படி நெடுகலும் கொடுமையாக நடத்தப்படுமானல் அல்லது கவனியாது விடப்படுமானல் ; அல்லது

(*d*) பரம்பும் வியாதி அல்லது தொற்றுவியாதியேதுவும் பிடித்திருக்கிருக்கும்போது மற்றெவ்வாண் நாயோடாவது பெண் நாயோடாவது கூடித்திரிய விடப்படுமானல்;

அச்சான்றுரைப்பத்திரம் ஒவ்வொன்றும் அக்கிராசனரால் அழித்துவிடப்படுவதற்கு இடமானதாகும்.

5. மேற்சொல்லிய பட்டண மண்டல சபைக் காரியதரிசி தமது அபிப்பிராயப்படி மற்றெவ்வாண் நாய்க்காவது பெண்நாய்க்காவது அதிலிருந்து வியாதி தொற்றக்கூடிய பிரகாரம் அவ்வளவாக வியாதி பிடித்த ; அல்லது (B) அதிக கிழடாய் விட்டதினுல், வியாதி பிடித்திருப்பதினுல் அல்லது காயப்பட்டிருப்பதினுல் உயிரோடிருப்பதற்கு ஏற்ற நிலையில்லாத எந்த ஆண் நாய்க்காவது பெண் நாய்க்காவது ஒரு பதிவுச் சான்றுரைப்பத்திரம் கொடுக்க மறுக்கலாம். அம்மறுத்தலோடு திருப்திப்பட்டுக்கொள்ளாத எவரும் அப்பட்டண மண்டல சபை அக்கிராசனரிடம் அப்பீல் முறையீடு செய்துகொள்ளலாம். அக்கிராசனர் அம்மறுத்தலை உறுதிப்படுத்தலாம், அழித்துவிடலாம் அல்லது வேபடுத்தலாம், அக்கிராசனரின் தீர்ப்பு முடிவானதாயிருத்தல் வேண்டும்.

6. (*a*) அதின் விஷயத்தில் ஒரு சான்றுரைப்பத்திரம் கொடாது மறுக்கப்பட்ட, அல்லது (*b*) அதின் விஷயத்திற் கொடுக்கப்பட்ட ஒரு சான்றுரைப்பத்திரம் இதிலே இதற்குமுன் ஏற்படுத்தியுள்ள நியாயங்களின் நிமித்தம் அழித்துவிடப்பட்ட ஒரு ஆண் நாயையாவது பெண் நாயையாவது வைத்திருப்பவரிடம் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவரிடம் காரியத்துக்கேற்றபடி, அந்த ஆண் நாயையாவது, பெண் நாயையாவது, அறிவித்தலிற் குறித்துள்ள நேரத்தில் மேற்சொல்லிய பட்டண மண்டல சபைக் கந்தோரிற் கொண்டுவந்து காட்டும்படி அக்கிராசனரால் ஓர் அறிவித்தல் ஒப்புவிக்கப்பட்டபோது, அவர் அப்படிச் செய்தல் வேண்டியதுமன்றி, அங்கே அதைத் தமது பொறுப்பில் ஏற்றுக்கொள்ளும்படி அதிகாரங்கொடுக்கப்பட்ட மேற்சொல்லிய பட்டண மண்டல சபையின் ஓர் உத்தியோகஸ்தரிடம் அதை ஒப்புவித்தலும் வேண்டும். அதன்மேல், அக்கிராசனர் தீர்மானிக்கும் வண்ணமாக அதின் விஷயத்திற் செய்யப்படுதல் வேண்டும்.

7. மொறட்டுவ சுவஸ்தான சுகாதார சங்க அக்கிராசனரால் உண்டாக்கப்பட்டு, 1909 ம் ஞூ ஒக்ற்ரோபர் ( ஐப்பசி)மீ 29 ந் தேதியைக் கொண்ட 6,337 ம் இலக்கக் கசெற் பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்டு, 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்க, சனுதிகார ஆட்சிச்சட்டத்தின் 247 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பலத்தைக்கொண்டு பெலமுற்று வழங்கிவரும் உபவிதிகள் இதனுல் தள்ளிவிடப்படுகின்றன.

அட்டவணை.

A அட்சரமாதிரிக் கடுதாசி.

நாய்களைப்பற்றிய உபவிதிகளின்படி எழுதிக்
கொடுக்கவேண்டிய விவரப்பத்திரம்.

வீட்டிலக்கம் : ————.
தெரு : ————.
வீட்டுக்காரன் பெயர் : ————.

| வைத்திருக்கும் நாய்களின் தொகை | விவரம் | | | | | | சொந்தக்காரன் பெயர் | பணங்கட்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | கழுத்தின் அளவு | விசேஷ அடையாளங்கள் | குறிப்புகள் | | |
| | | | | | | | | |

ஒப்புவித்த தேதி : ————.

————
வீட்டுக்காரனின் கையொப்பம்.

மேற்சொல்லிய வீட்டுக்காரனுனவர் மேலே காணும் அட்டவணையை எழுதி நிரப்பி ஒரு கிழமைக்குள் அனுப்பிவைக்கும்படி இதனுல் கேட்கப்படுகிருர். அப்படிச செய்யாது அசட்டைபண்ணி விட்டுவிடும் எவரும் 20 ரூபா தெண்டமிறுப்பதற்குப் பாத்திரராவர்.

அக்கிராசனரின் கட்டளைப்படி,

————
காரியதரிசி.

பட்டண மண்டலசபைக் கந்தோர்,
19 — ம் ஞூ ———— மீ —— ந் வ.

B அட்சரமாதிரிக்கடுதாசி.

நாய்களைப்பதிவுசெய்தலைப்பற்றிய சான்றுரைப்பத்திரம்.

தெரு : ————.

பதிந்த இலக்கம்.

———— ம் இலக்கத்தையுடைய தமது வீட்டிலிருக்கும் ———— என்பவர் கீழே சொல்லியிருக்கும் விபரமுடைய ஒரு ஆண் நாயை-பெண் நாயை இன்று இந்தக் கந்தோரிற் பதிவு செய்தருக்கிருரென்றும், அதற்காக ரூபா ———— பதிவு வேதனம் கட்டப்பட்டிருக்கிறதென்றும் இதைக்கொண்டு உறுதிமொழி கூறப்படுகின்றது.

நாயின் விபரம்.

சாதி : ————.

ஆணோ பெண்ணோ : ————.

நிறம் : ————.

கழுத்தின் அளவு : ————.

விசேஷ அடையாளங்கள் : ————.

இந்தச் சான்றுரைப்பத்திரம் 19 —— ம் ௵ (மார்ச்) பங்குனி மீ 31 ந் தேதி வரையிலும் பெலமுற்று வழங்கிவரும்.

காரியதரிசி.

பட்டண மண்டலசபைக் கந்தோர்,
19 — ம் ௵ ———— மீ —— ந் உ.

---

இத்தாற் சகலருமறியவேண்டியது என்னவென்றால் கேகாலை டிஸ்திறிக் சுகாதார சங்கத்தால் 1901 ம் ஆண்டு 25 ம் இலக்க ஓடினன்சின் 5 ம் பிரிவின்கீழ் இயற்றப்பட்டு, 1928 ம் ஆண்டு ஆடி மீ 20 ந் திகதியைக் கொண்ட 7,655 ம் இலக்கக் கவுண்மேந்து கசெற் பத்திரிகையில் பிரசாகு செய்யப்பட்ட முதலாம் உபவிதி இதனால் மாற்றப்பட்டு பின்வரும் உபவிதி அதனிடத்து உண்டாக்கப்பட்டிருக்கின்றது.

1936 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ம் திகதியைக்கொண்ட 8258 ம் இலக்கக் கவுண்மேந்து கசெற் பத்திரிகையில் உள்ள பிரசித்தம் இதனால் அழிக்கப்படுகின்றது.

ஆர். எஸ். வீ. பொலியர்,
அக்கிராசனர், கேகாலை சுகாதார சங்கம்.

சுகாதாரசங்க ஆபீஸ்,
கேகாலை, 1937 ம் ௵ மாசி மீ 13 ந் உ.

மேற்கூறப்பட்ட உபவிதி.

1. நகர எல்லைக்குள் வைத்திருக்கப்படும் நாய்களின்பேரால் பதிவுப் பணமாக வருஷாந்தம் ஆண் நாயொன்றிற்கு ரூபா ஒன்றும் பெண் நாயொன்றிற்கு ரூபா ஒன்று சதம் ஐம்பதும் கட்டப்படவேண்டும்.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
இலக்கம் 1,506 (கண்டி)

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ௵ (பெப்பிரவரி) மாசி மீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிட் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்துன் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937 ம் ௵ (ஜனவரி) தை மீ 15 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

ஆர். மொனிபெனி,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏஜண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழிப்பிரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், உடபலாத்த பகுதியில் கங்க இஹல கோறளையிலுள்ள வெறவில கிராமத்திலிருக்கும் கீழ்க்காணப்படும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடத்து இல. A 220.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கெத்தவலபத்தன (பாம்பமட எலவோடு சேமித்த நிலம்) .. | 0 1 15 |

எல்லை :— வடக்கு-கெ. களுவும், மறுவும் உரித்தாடும் அமுகொட்டுவ வத்த ; கிழக்கும் தெற்கும்-உரிமைப் படம் T 2,961 ல் விபரித்த காணி ; மேற்கு-பாம்பமட எலா.

II.—பிரதமபடத்து இல. A 220.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 8 | பாம்பமடபத்தன அல்லது கெத்தவலபத்தன .. | 0 3 9 |
| 14 | உல்கலமூலகேன (கல்கொல்லஎலாவோடு சேமித்த இடம்) .. | 0 0 33 |
| 23 | மொறகஹமூலகொம்மன .. .. | 8 1 8 |
| 31 | உல்கலமூலகேன (கல்கொல்லஎலாவோடு சேமித்த இடம்) .. | 1 0 7 |
| 32 | பாம்பமடபத்தன, கெத்தவலபத்தன, அம்புல்மீயகஹமூலகேன, நறங்கஹமூலகேன, உல்கலமூலகேன (பாதைக்குச் சேமித்த இடம்) .. | 0 2 37 |
| 33 | நறங்கஹமூலகேன, உல்கலமூலகேன (பாதைக்குச் சேமித்த இடம் .. | 0 0 14 |

எல்லை: வடக்கு-உரிமை படங்கள் 305,925, T 7,548, T 4,430 T 7,555, த 7,322, T 3,472, T 7,321, T 7,567, T 3,471, T 7,549, T 4,450 ல் விபரித்த காணிகள், முடிக்குரியதென்று சொல்லப்படும் கெத்தவலபத்தன, கெ. சிறிபின்னவும் மறுவும் உரித்தாடும் யத்ததெனிய கும்புற அல்லது அமுகொட்டுவகும்புற, எலாக்களும் கல்கொல்லஎலாவும் ; கிழக்கு-கல்கொல்லஎலா ; தெற்கு-கத்தாறம்ப எஸ்ரேற், ஏசண்ட்ஸ், மெசஸ் ஜோர்ஜ்ஸ்ரிவாட் அண்ட் கோ.; உரிமைப்படங்கள் T 3,730, T 7,368, T 3,474, T 3,473, T 5,133, T 2,962, T 3,742 ல் விபரித்த காணிகள், ஓர் எலாவும் ஓர் பாதையும் ; மேற்கு-இங்குறுகொல்ல எஸ்ரேற், ஏசண்ட்ஸ் : மெசஸ், T ஈஸ்ரேண்புறடியூஸ் எஸ்ரேற்ஸ் கொம்பனி லிமிற்றட்.

III.—பிரதமபடத்து இல : A 220.

| துண்டு. | காணியின் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 12 | வெட்டகஜகஹமூலவத்த (கல்கொல்லஎலாவோடு சேமித்த இடம்) .. | 0 1 2 |
| 13 | யத்ததெனிய (கல்கொல்லஎலாவோடு சேமித்த இடம் | 0 1 22 |
| | மொத்தம் .. | 12 0 27 |

எல்லை : வடக்கு-கெ. சிலிந்துவும் மறுவும் உரித்தாடும் வெட்டகஜயாகஹமூலகும்புற, கல்கொல்லஎலா ; கிழக்கு-கல்கொல்லஎலா ; தெற்கு-கே. சிறிபினவும் மறுவும் உரித்தாடும் யத்ததெனியகும்புற அல்லது அமுகொட்டுவகும்புற ; மேற்கு-உரிமைபடம் T 7,556 ல் விபரித்த காணியும், கே. சிலிந்துவும் மறுவும் உரித்தாடும் வெட்டகஜயாகஹமூல கும்புறவும்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு-காலி றோட்டு டிக்மன்ஸ் றோட்டிலிருந்து பிடறறிக்கா றோட்டு வரைக்கும் அகலித்தற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடம் இல. A 619. கிராமம்—பம்பலப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 3 | பம்பலப்பிட்டி றோட்டில் இறைவரி இலக்கம்295 (கில்டன்) கொண்ட ஆதனத்தின் பகுதி | தோட்டம், 8 வருஷஞ்சென்ற 1 அறலியமரமும், 1 பெலிமரமும், பூக்கன்றுகளும், குறோட்டன்பத்தைகளும், ஒரு கட்டடச் சுவருள்ள தலைவாசலின் பகுதியும், மரத்தால் செய்த ஜன்னல் வெய்யில் மறைவின் பகுதியும், 2 மக்கி றோட்டின் பகுதியும், கட்டடச் சுவர்களும், 4 கட்டடப்படலைத் தூண்களுமுள்ளது | அப்துல்குசன் டாவூட் பாய், இல. 7, அமுலா வில்லா, காலி றோட்டு, வெள்ளவத்தை | 0 0 13·57 |

பிரதமபடம் இல. A 703. கிராமம்—பம்பலப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பம்பலப்பிட்டி றோட்டில் இறைவரி இலக்கம் 295 கொண்ட ஆதனத்தின் பகுதி | தோட்டம், 30 வருஷஞ்சென்ற 4 தென்னையும், 10 வருஷஞ்சென்ற 1 இற்றுமரமும், 15 வருஷஞ்சென்ற 2 மாவும், 5 வருஷஞ்சென்ற 1 பிலிங்மரமும், 3 வருஷஞ்சென்ற 8 பப்பாமரமும், 5 வருஷஞ்சென்ற 6 முருங்கைமரமும், 4 வருஷஞ்சென்ற 1 பருத்தியும், 4 வருஷஞ்சென்ற 1 கஸ்ராட்அப்பிள்மரமும், 15 வருஷஞ்சென்ற 1 எற்றுறியமரமும், 1 வருஷஞ்சென்ற 1 வாழைஅடியும், ஒரு ஓட்டால் வேய்ந்த கட்டடமும், 1 தகரக் கொட்டிலும், 1 ஓட்டாலும் தகரத்தாலும் வேய்ந்த கட்டடமும், 3 சோதனைக்குழாயும், 4 கல்லீசும், கட்டடப்படிகளும், கட்டடத்தூண்களும், கட்டடக்கான்களும், 1 மரப்படலையும், தலைவாசலின் பகுதியும், இரும்புக் கம்பிவேலிகளின் பகுதிகளுமுள்ளது | அப்துல் குசன் டாவூட் பாய், இல. 7 அமுல்லா வில்லா, காலி றோட்டு, வெள்ளவத்தை | 0 1 10·82 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சுகாதார ஆட்சிமந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவாவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு பங்குனி மாசம் 15 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1937 ம் ஆண்டு மாசிமீ 17 ந் உ.

ஆர். எம். எம். ஹூர்ஸ்லி,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அம்பலாங்கொடை நகரசங்க காரியாளயமும் நகரசாலையும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 475. குறிச்சி—பட்டபெண்டிமுல்லை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | டண்வத்தை (2 ம் வட்டாரம்) 583 ம் மதிப்பிலக்கமுடைய காணியின் ஓர் பாகம் | தென்னந்தோட்டம், அங்கு பலகைச்சுவரும், தகரக்கூரையு முள்ள ஓர் கராஜும், 25-50 வயதுள்ள 44 தென்னை களும், 3 வயதுள்ள ஓர் தென்னங்கன்றும், ஒரு கித்துள் மரமும், 25 வயதுள்ள 34 கமுகுமுண்டு | அம்பலாங்கொடை ஜீ. சைமன் டீ. சில்வாவும் மறுவும் | 0 1 10·1 |
| 2 | டண்வத்தை, மதிப்பிலக்கம் 585, (2 ம் வட்டாரம்) | தென்னந்தோட்டம், அங்கு 9 தென்னைகளும், 3 கமுகுக ளும், 1 மாமரமும், 1 சப்புமரமும், 1 பலாவும் (40 வய துள்ள), மண்சுவரும் கிடுகுகூரையுமுள்ள ஓர் வீடும் உண்டு | அம்பலாங்கொடை, பட்டபெண்டி முல்லை, பீ. டபிள்யு. என்டோரிஸ் உம், பீ. டபிள்யு. டானியேல் சில்வா வும் | 0 0 15·7 |
| 3 | பலாவத்தை, 587 ம் மதிப் பிலக்கம் (2 ம் வட்டாரம்) | தென்னந்தோட்டம், 20-50 வயதுள்ள 5 தென்னைகளுண்டு | அம்பலாங்கொடை என். டீ. எஸ். விக்கிறமநாயக | 0 0 2·1 |
| 4 | அம்பகாவத்தை (2 ம் வட்டா ரம்) 425 ம் மதிப்பிலக் கக் காணியின் ஓர் பாகம் | வெண் துண்டு .. .. | பட்டபெண்டிமுல்லை எஸ். ஏபிரகாம் சில்வா | 0 0 0·6 |
| 5 | அம்பகாவத்தை (2 ம் வட்டா ரம்) 425 ம் மதிப்பிலக்கக் காணியின் ஓர் பாகம் | வெண் துண்டு .. .. | பட்டபெண்டிமுல்லை எஸ். ஏபிரகாம் சில்வா | 0 0 0·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு மார்ச் மாசம் 13 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

காலிக் கச்சேரி,
1937 ம் ஆண்டு பெப்ருவரிமீ 16 ந் உ.

டபிள்யு. டீ. குணறத்ன,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மூதூரில் (முசிலிம்) ஓர் கிராமப் பாதைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 233. குறிச்சி—மூதூர் (முசிலிம்).

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அக்கரைச்சேனை .. | தரிசுநிலம் .. | மூதூரிலிருக்கும் அசனு லெவ்வை சீனிக்குட்டி .. | 0 0 6·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவாவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு சித்திரை மாசம் 5 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு மூதூர்க் கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருகோணமலைக் கச்சேரி,
1937 ம் ஆண்டு மாசிமீ 10 ந் உ.

சீ. ஜே. டேன் லண்றீ,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொல்லன் ஆறு ரேட்டைச் சந்திப்பதற்கு ஒரு கிளை ரேட்டுத் திறப்பதற் காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 231. குறிச்சி—மூதூர் (தமிழ்).

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அக்கரைச்சேனை .. | தரிசுநிலம் .. | மூதூரிலிருக்கும் உதுமாம்பிள்ளை உமறு .. | 0 0 0·2 |
| 2 | கொல்லனுறுச்சேனை .. | டிெ .. .. | திரிகோணமலையிலிருக்கும் டீ. எஸ். பண்டாரு .. | 0 0 3·3 |
| 3 | அக்கரைச்சேனை .. | டிெ .. .. | மூதூரிலிருக்கும் உதுமாம்பிள்ளை உமறு .. | 0 0 5·7 |
| 4 | கொல்லனுறுச்சேனை .. | டிெ .. .. | மூதூரிலிருக்கும் சின்னத்தம்பி சின்னவாப்பா .. | 0 0 4·4 |
| 5 | டிெ .. | டிெ .. .. | மூதூரிலிருக்கும் முகம்மது மதார் சீனித்தம்பி .. | 0 0 1·2 |
| 6 | அக்கரைச்சேனைவளவு .. | டிெ .. .. | மூதூர் கோவிற்பற்றிலிருக்கும் கனம் பொருந்திய கே. அலோசியஸ் மேறி, எஸ். ஜே. | 0 0 6·6 |
| 7 | கொல்லனுறுச்சேனை .. | டிெ .. .. | மூதூரிலிருக்கும் ஏ. நெயினு .. .. | 0 0 1·4 |
| 8 | டிெ .. | டிெ .. .. | மூதூரிலிருக்கும் ஏ. என். பைவாவும், ஏ. சுவாம்பிள்ளை பைவாவும் | 0 0 2·3 |
| 9 | டிெ .. | டிெ .. .. | மூதூரிலிருக்கும் ஜே. ருகல் .. .. | 0 0 0·4 |
| 10 | அக்கரைச்சேனைவளவு .. | தரிசுநிலம், பதினைந்து வருஷஞ் சென்ற ஒரு வேப்பமரமுள்ளது | மூதூரிலிருக்கும் ஜீ. செபமாலை .. .. | 0 0 4·5 |
| 11 | கொல்லனுறுச்சேனை .. | தரிசுநிலம் .. .. | மூதூரிலிருக்கும் ஜே. ருகல் .. .. | 0 0 1·5 |
| 12 | டிெ .. | தரிசுநிலம், பதினைந்து வருஷஞ் சென்ற ஒரு வேப்பமரமுள்ளது | மூதூர் கோவிற்பற்றிலிருக்கும் கனம் பொருந்திய கே. அலோசியஸ் மேறி, எஸ். ஜே. | 0 0 1·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஞூ சித்திரை மாசம் 6 ந் தேதியிலன்று காலை 9 அணிக்கு மூதூர்க் கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1937 ம் ஞூ மாசிமீ 15 ந் உ.

சீ. ஜே. டேன் லயற்றீ,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## காணி பண்படுத்தற் சட்டங்கள்.

பேர்மிற் உத்தரவுப்பத்திரங்கள் வாங்க ஆட்களைத் தெரிந்துகொள்வதற்கான
காணிக் கச்சேரியைப்பற்றிய விளம்பரம்.

(இடைவகுப்பு இலங்கையர்.)

அவைகளைப்பற்றிய விவரங்கள் கீழே காட்டியுள்ள காணிகள் கேட்கும் விண்ணப்பங்களைப்பற்றி யோசிப்பதற்கும் அவைகளின் பாகங்களுக்குப் பேர்மிற் உத்தரவுப்பத்திரங்கள் வாங்க ஆட்களைத் தெரிந்துகொள்வதற்கும் 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க, காணி பண்படுத்தற் சட்டத்தின்படி 1937 ம் ஞூ சித்திரைமீ 27 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு வவுனியாக் கோட்டு வீட்டில் முல்லைத்தீவு உதவிக் கவண்மேந்து ஏஜன்றர் ஒரு காணிக் கச்சேரி நடத்துவாரென்று இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. பங்கீடுகள் இடை வகுப்பு இலங்கையருக்கு மாத்திரமே கிடைக்கும்.

3. எல்லா விண்ணப்பப்பத்திரங்களும் 1937 ம் ஞூ பங்குனிமீ 10 ந் தேதியிலன்று அல்லது அத்தேதிக்குமுன் முல்லைத்தீவுக் கச்சேரியில் உதவிக் கவண்மேந்து ஏஜன்றரிடம் வந்து சேரவேண்டும்.

4. கேட்டிருக்கும் காணியின் விசாலத்தின்படி ஏக்கர் ஒன்றுக்கு மூன்று ரூபா வீதமான வைப்புப்பணம் எல்லா விண்ணப்பப்பத்திரங்களோடுங் கூட அனுப்பப்படவேண்டும். விண்ணப்பக்காரன் ஆனவர் செய்த அல்லது செய்யாமல்விட்ட காரியம் எதினதும் நிமித்தமும் அவசியமில்லாத ஒரு நில அளவைக்கு அரசாட்சியார் பணம் செலவிட்டிருந்தால் அவ்வைப்புப்பணம் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது. குறித்த எந்த விஷயத்திலும் அவ்வைப்புப்பணம் திரும்பக் கொடுக்கப்படலாமோ அல்லவோவென்று காணிக் கொம்மிஷனர் செய்யுந் தீர்மானம் முடிவானதாயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாங்களே காணிம் கச்சேரிக்கு வரவேண்டும் அல்லது தங்கள் பிரதிநிதியாக ஒருவரை நியமித்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பக்காரன் ஆனவராவது அவருக்குப் பிரதிநிதியாக நியமித்தனுப்பப்பட்ட எவராவது காணிக் கச்சேரிக்கு வந்திரா விட்டால், விண்ணப்பக்காரன் ஆனவர் தம் விண்ணப்ப விஷயத்தில் மேலும் தொடர்ந்துசெல்ல விருப்பமில்லையென்று உதவிக் கவண்மேந்து ஏஜன்றர் அனுமானித்துக்கொள்ளலாம்,

6. இந்தக் காணிக் கச்சேரியைப்பற்றி யாதும் விசாரித்தறியவேண்டுமானால் அக்காரியங்களைப்பற்றி உதவிக் கவண்மேந்து ஏஜன்றருக்கு எழுதி விசாரித்துக்கொள்ளவேண்டும்.

கொழும்பு,
1937 ம் ஞூ மாசிமீ 16 ந் உ.

சீ. எல். விக்கிறமசிங்ஹ,
காணிக் கொம்மிஷனர்.

பங்கிட்டுக்கொடுக்கவிருக்கும் காணியைப்பற்றிய விவரங்கள்.

| பிரதமபடம். | பாகம். | கிராமம். | விசாலம் ஏறக்குறைய எவ்வளவு. ஏ. றூ. பே. | காணி என்னென்ன பயிர்கள் செய்வதற் ஏற்றது. |
|---|---|---|---|---|
| A 1146 .. | 1 .. | மடுக்கந்தை குறிக்கப்பட்ட காணி மனியர்குளமென்னும் தாவடிக்குளத்தின் கீழுள்ளது, வவுனியா-கொறோப்பத்தானை றோட்டில் 4½க்கும் 5ம் கட்டைகளுக்குமிடையேயுள்ளது, குடாக்கச்சக்கொடியா, மண்டுக்கோட்டை அல்லது மடுக்கந்த என்னும் கிராமங்களிலிருந்து இலேசாய்ப் போகக் கூடியது, கருங்காலிக்குளத்துக் காவல் காட்டில் ஓர் பகுதியாயிருந்தது, ஆனால் இப்போ இடைவகுப்பு இலங்கையருக்குக் கொடுப்பதற்காகக் காவல்காட்டிலிருந்து விடுவிக்கப்பட்டது | 50 0 36 .. | நெற்செய்கைக்கு |

---

முடிக்குரிய காணியுறுதிப்பத்திரங்கள் வாங்க ஆட்களைத் தெரிந்து
கொள்வதற்கான காணிக் கச்சேரியைப்பற்றிய விள்ம்பரம்.

அவைகளைப்பற்றிய விவரங்கள் கீழே காட்டியுள்ள முடிக்குரிய காணிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் வாங்க் ஆட்களைத் தெரிந்துகொள்வதற்கு 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க, காணி பண்படுத்தற் சட்டத்தின்படி 1937 ம் ஞூ ஏப்பிரல்மீ 20 ந் தேதியிலன்று முற்பகல் 9 மணிக்கு கள்முறுவ மா. றோட் கம்மிற்றி பங்களாவில் புத்தளம் சலாபம் பிரிவுகளின் உதவிக் கவண்மேந்து ஏஜென்றர் ஒரு காணிக் கச்சேரி நடத்துவாரென்று இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

இக்காணிக் கச்சேரியைப்பற்றி யாதும் விசாரித்தறியவேண்டுமானால் அக்காரியங்களைப்பற்றி உதவிக் கவண்மேந்து ஏஜன்றருக்கு எழுதி வியாரித்துக்கொள்ள வேண்டும்.

சீ. எல். விக்கிறமசிங்க,
காணிக் கொம்மிஷனர்.

பங்கிட்டுக்கொடுக்கவிருக்கும் காணியைப்பற்றிய விவரங்கள்.

பிப. இல. 6,448.—கிராமம்—குடிறிப்புவ.

| படத்தின் இலக்கம். | பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 10 | சிங்கலபெடிகே சிற்றி .. .. | 1 | 0 | 3 |
| 11 | ஏ. றன்கிறகெனுய .. .. | 1 | 0 | 0 |
| 12 | ஜெ. மிற்றியா .. .. | 1 | 0 | 0 |
| 13 | கெ. எல். ஏ. ஹென்டிறிக்நயிடே .. | 1 | 0 | 1 |
| 14 | எச். அந்தோனி அப்பு .. .. | 1 | 0 | 1 |
| 15 | பீ. ஏ. மா்ட்டின்சிஞ்ஞோ .. .. | 0 | 3 | 35 |
| 16 | எச். ஏ. யோன்சிஞ்ஞோ .. .. | 0 | 3 | 39 |
| 19 | என். அமாறிஸ் சில்வா .. .. | 0 | 3 | 3 |
| 20 | ஜெ. ஏ. ஹென்டிறிக் அப்பு .. .. | 0 | 3 | 37 |
| 22 | எச். ஹொறதல .. .. | 0 | 3 | 32 |
| 23 | ஜெ. பொடியா .. .. | 1 | 0 | 0 |
| 24 | ஜெ. பிலிண்டா .. .. | 1 | 0 | 2 |
| 25 | ஜெ. கெகுல .. .. | 0 | 3 | 32 |
| 26 | ஜெ. ஏ. யக்கொலிஸ் அப்பு .. .. | 0 | 2 | 32 |
| 27 | கே. எம். கல்டேற .. .. | 0 | 2 | 38 |
| 28 | ஆர். ஏ. யுவான் அப்பு .. .. | 0 | 2 | 39 |
| 29 | டபிள்யூ. எம். அப்புஹாமி .. .. | 0 | 3 | 2 |
| 30 | ஜெ. ரென்னக்கூன் .. .. | 0 | 3 | 36 |
| 31 | டபிள்யூ. ஏ. சன்டிறிஸ்ஹாமி .. | 0 | 3 | 30 |
| 32 | ஈ. எம். முதலிஹாமி .. .. | 0 | 3 | 34 |
| 33 | ஏ. அனுற .. .. | 0 | 2 | 34 |
| 34 | சமற .. .. | 0 | 2 | 29 |
| 35 | டபிள்யூ. ஈ. எம். அல்பேனிஸ் அப்பு .. | 1 | 1 | 31 |



---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

நிலாவெளி உப்புக்குதத்திலிருந்து மட்டக்களப்பு உப்புக்குதத்திற்கு 24,000 அந்தர் உப்பை 1937 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 ந் திகதிக்கும் ஆடி மாசம் 31 ந் திகதிகுமிடையில் மூன்று வாய்தாக்களில் ஒப்புக் கொடுப்பதற்கு கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வைகாசி மாதம் 31 ந் திகதிக்குமுன் 8,000 அந்தர்
ஆனி மாசம் 30 ந் திகதிக்குமுன் 8,000 அந்தர்
ஆடி மாசம் 31 ந் திகதிக்குமுன் 8,000 அந்தர்

2. நிலாவெளியிலிருந்து ஒரு அந்தர் நிறுத்து சாக்குகளில் போடும் செலவையும், சாக்குகளின் பெறுமதியையும் சேர்த்து அடுக்குச் செலவோடு என்ன வீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக் கடுதாசியில் காட்டப்படவேண்டும்.

3. ஒப்பந்தக்காரன் தனது செலவில் சாக்குகளைக் கொடுக்கவேண்டும். சாக்குகளில் உப்பு நிரப்பப்பட்ட பின் அவற்றில் முத்திரை வைத்துக் கொடுக்கப்படும். பின் ஒப்பந்தக்காரன் இம்முத்திரைகள் பழுதடையாவண்ணம் மட்டக்களப்பு உப்புக்குதத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். குதத்தில் உப்பைச் சொரிந்தபின் வெறும் சாக்குகளை ஒப்பந்தக்காரனிடம் திருப்பிக் கொடுக்கப்படும்.

4. சாக்குகளெல்லாம் ஒரே அளவுள்ளதாயும், 1 அந்தர் அல்லது 1¼ அந்தர் கொள்ளக்கூடியதாயுமிருக்கவேண்டும். எந்த அளவு கொண்ட சாக்குகளை குத்தகைகாரன் விரும்புகிறுனென்று கேள்விக் கடுதாசியில் காட்டப்பட்டவேண்டும்.

5. எல்லா ஒப்பப் பத்திரங்களும் இரண்டு பிரதிகளில் எழுதப்பட்டும், மெழுகு முத்திரையிடப்பட்டு பின்வரும், விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும் :—

ஒப்பப்பத்திர சங்கத்தலைவர்,
(Chairman of the Tender Board)
அரசினர் பொக்கிஷசாலை,
(தபால்பெட்டி நொ. 500),
கொழும்பு.

6. ஒப்பப்பத்திரங்கள் அரசினர் பொக்கிஷசாலையில் அதற்காக வைக்கப் பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும். தபால் மூலமாய் அனுப் பும்பொழுது பதிவு கடிதமூலமாய் அனுப்பப்படல் வேண்டும்.

7. கேள்விக்கடுதாசியின் உறையின் இடப்பக்க மூலையில் " நிலாவெளி யிலிருந்து மட்டக்களப்புக்கு உப்பு ஏற்றக் கேள்விக்கடுதாசி " யென்று எழுதப்படல் வேண்டும். கேள்விக்கடுதாசிகளை, 1937 ம் ஆண்டு பங்குனி மாதம் 16 ந் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியத்திற்கு பிந்தாமல் ஒப்பப்பத்திர சங்கத்தலைவரிடம் சேர்க்கப்படல் வேண்டும்.

8. கேள்விக்கடுதாசிகள் குறிக்கப்பட்ட மாதிரிப்பத்திரங்களில் எழுதப் படல் வேண்டும். அம்மாதிரிப்பத்திரங்களை மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட மாதிரிப் பத்திரங்களில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. ஒப்பப்பத்திரங்களிலுள்ள எல்லா மாற்றங்கள் அல்லது திருத்தங் கள் ஒப்பப்பத்திரகாரரின் தலையெழுத்துக்களால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

10. கேள்விக்காகிய மாதிரிப்பத்திரம் பெறுவதற்கு ரூபாய் 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்கவேண்டும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தில் அறிவித்தல் பெற்று பத்து நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதி முடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய பிணை கொடுக்கத் தவறினுல் கட்டிய பணம் ரூ. 50 ம் அரசாட்சி யாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத் தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக்கூடிய வராயிருப்பர். ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்டதின்மேல் கட்டிய ரூபாய் 50 ம் திருப்பிக்கொடுக்கப்படும்.

11. ஒப்பந்தவேலையை நடப்பிப்பதற்கு பிணைகாரராய் வருவோமென்று சம்மதம் சொல்லித் தங்கள் மேல் விலாசங்களைக் கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக் கடுதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

12. ஒப்பந்த வேலை சரிவர நிறைவேற்றுவதற்காய் கொடுக்கும் உறுதியில் போதிய பிணைகாரர் சேரல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் கிடைத்த பின்னர் கட்டவேண்டிய காசுப்பிணை எவ்வளவென்பதைத் தீர்மானிக்கப்படும். வேறு தேவையான விளம்பரங்களை மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

13. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்படமாட்டாது.

14. அரசாட்சி ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட எதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒற்றும், தனித்தும், வேறு ஆட்களுடனுவது கொடுக்கப்படமாட்டாது, அல்லது ஒப்பந்தக்காரன் அர சாட்சி ஒப்பந்தக்காரரின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் எதொருவரையும் அல்லது கீழ் மாகாண ஏசன்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களினிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலை செய்ய நியமிக்கப்படாது.

15. கேள்விகளிலொன்றை அல்லது எல்லாவற்றையும் கையேராமல் தள்ளிவிட அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

ஆ. விஸ்வநாதன்,
கீழ் மாகாண அரசாட்சி ஏசன்றருக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1937 ம் ஆண்டு தைமீ 29 ந் உ.

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்கள்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல் லிய சுப்பிரீங் கோட்டாரால் மத்திய மாகாணத்தைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1937 ம் ஆண்டு பங்குனிமீ 10 ந் திகதியாகிய புதன் கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல் லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப் பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவார்கள்.

இங்ஙனம்,

கண்டி பிஸ்கால் கந்தோர், — றீ. ஏ. ஹட்சன்,
1937 ம் ஹு மாசிமீ 12 ந் உ. — பிஸ்காலி.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற் சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் அனுராசபுரம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1937 ம் ஆண்டு பங்குனி மாதம் 10 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற் கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரிய கருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப் பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்கா திருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

பிஸ்கால் கந்தோர், அனுராசபுரம், — டபிள்யூ. என். ஜோசப்.
1937 ம் ஹு மாசிமீ 12 ந் உ. — உப பிஸ்கால். வ. ம. மா.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற் சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் கேகாலை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமி னெல் வழக்கு விசாரணை, 1937 ம் ஆண்டு மார்ச்மீ 10 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களி லும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர் கள்.

இங்ஙனம்,

பிஸ்கால் கந்தோர், இரத்தினபுரி, — என். ஜே. லடிங்டன்.
1937 ம் ஹு பெப்ரவரிமீ 12 ந் உ — பிஸ்கால், சப்ரகமுவா.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற் சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் வதுளை டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினல் வழக்கு விசாரணை, 1937 ம் ஆண்டு பங்குனி மாதம் 10 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற் கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரிய கருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்று நீங்கா திருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

பிஸ்கால் கந்தோர் வதுளை, — றீ. ஜே. மெண்டிஸ்,
1937 ம் ஹு மாசி 15 ந் உ. — ஊவா பிஸ்காலுக்காக.

## உத்தியோகசம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

கொழும்பு பகுதியிலுள்ள சியனக் கோறளை மெதபத்துவைச்சேர்ந்த அளுத்கமையில் வசிக்கும் டொன் ஜொஹன்னஸ் முதலி மஹிபால ஆகிய நான், பதுல்ல பகுதியில் சிங்களப் பாஷையால் பிரசித்த நொத்தாரிஸ் கடமைப்பார்க்கும் ஒருவராக நியமிக்கும்படி அரசினர் பதிவுக் கந்தோர் தலைவரிடம் இன்று முதல் 3 மாதத்திற்குப் பின் விண்ணப்பிப்பேனென் பதை 1907 ம் ஆண்டு 1 ம் கட்டளைச் சட்டத்தின் 1 B செடியுலில் 2 ம் பிரமாணத்தின்படி இத்தால் அறிவிக்கின்றேன்.

டீ. ஜே. எம். மஹிபால,

அளுத்கம, 1937 ம் ஹு மாசிமீ 18 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.